இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -12


# நேர்மை நெறி


டிசம்பர் 2022

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)


நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

(NERMAI NERI)


Rs.10


## ஊழல் ஒழிப்பும் மனித உரிமையே

*உலக ஊழல் எதிர்ப்பு தினம் டிசம்பர் 09 ; உலக மனித உரிமை தினம் டிசம்பர் 10*




## ஊழல் நம் நாட்டின் சாபம்


PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை



பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, "நம்பகம்",
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023

Cell:8778312823

e-mail:acmchennai2001@yahoo.co.in

website:anticorruptionchennai.com

# செய்யாத பணிகளுக்கு ரூ.11 கோடியை ஒப்பந்ததார்களுக்கு வழங்கிய அண்ணா பல்கலை. - சிஏஜி தகவல்

**சென்னை:** செய்யாத பணிகளுக்கு ரூ.11 கோடியை ஒப்பந்ததாரர்களுக்கு அண்ணா பல்கலைக்கழகம் முறைகேடாக வழங்கி உள்ளதாக கணக்கு தணிக்கைத் துறை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு பதிவுகளை டிஜிட்டல் மயமாக்க அண்ணா பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் முடிவு செய்து கடந்த 2016ம் ஆண்டு ஜிஎஸ்டி லிமிடெட் என்ற நிறுவனத்துடன் ஒரு பக்கத்திற்கு ரூ.46 என்ற அடிப்படையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மாணவர்களின் மதிப்பெண் விவர தொகுப்பு தவிர்த்து மற்ற ஆவணங்களை டிஜிட்டல் மயம் ஆக்க மேற்கொள்ளப்பட்டது.

இதைத் தவிர்த்து மதிப்பெண் விவர தொகுப்புகளை டிஜிட்டல் மயம் ஆக்க மேட்ரிக்ஸ் இன்க் என்ற நிறுவனத்திற்கு, பக்கத்திற்கு ரூ.25 என்ற விலையில் ஒப்பந்தம் அளிக்கப்பட்டது. இதன்படி 2012 முதல் 2016ம் ஆண்டு கல்வி பதிவேடுகளை டிஜிட்டல் மயம் ஆக்க ரூ.11.41 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

இதில் ஜிஎஸ்டி நிறுவனம் 7,33,722 பதவிகளை மட்டுமே டிஜிட்டல் மயம் ஆக்கியுள்ளது. ஆனால் இந்த நிறுவனத்திற்கு 20,92, 305 பதிவுகளை டிஜிட்டல் மயம் ஆக்கியதற்கு பணம் வழங்கப்பட்டுள்ளது. எந்தப் பதிவுகளையும் டிஜிட்டல் மயம் ஆக்காத மேட்ரிக்ஸ் இன்க் நிறுவனத்திற்கு 1,20,000 பதிவுகளை டிஜிட்டல் மயம் ஆக்கியதற்கு பணம் வழங்கப்பட்டுள்ளது.

**இதன் மூலம் செய்யாத பணிகளுக்கு ரூ.11.41 கோடியை ஒப்பந்ததாரர்களுக்கு அண்ணா பல்கலைக்கழகம் முறைகேடாக வழங்கி உள்ளதாக கணக்கு தணிக்கை துறை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும், இது குறித்து விசாரணை நடத்தவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

---

## நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்

### காந்திஜியின் தமிழ்ப்பற்று

**1934-ம் ஆண்டு சென்னையில் நடந்த பொதுக்கூட்டமொன்றில், காந்திஜியும் "தமிழ்த் தாத்தா" என்றழைக்கப்படும் டாக்டர் உ வே சாமிநாத ஐயரும் பேசினர்.**

**பேசி முடித்தவுடன் காந்திஜி சாமினாத ஐயரிடம் , "நான் உங்களுடைய மாணவனாக இருந்து தங்களிடம் தமிழைக் கற்றுக்கொள்ளக் கூடிய பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை!" என்று வருத்தத்துடன் கூறினார்**

**அதற்கு டாக்டர் ஊ.வே.சா, "தில்லையாடியைச் செர்ந்த கனியப்பச் செட்டியார் தங்களுக்கு அருமையான தமிழைக் கற்றுத்தந்திருக்கிறார் என்பதை நான் நன்கு அறிவேன். தங்களது தமிழ்ப்பற்றும் பேச்சும் அபாரமானது " என்றார்**

**உடனே காந்திஜி புன்முறுகலுடன், " இருக்கலாம்! ஆனால் நான் கற்ற தமிழ் கைம்மண் அளவு தானே; கல்லாத தமிழ் உலகளவு உள்ளதே! என்று தன்னடக்கத்துடன் கூறினார்.**

**தமிழ் மீது காந்திஜி வைத்திருந்த பற்றை எண்ணி , டாக்டர் உ வே சாமிநாத ஐயர் மனம் நெகிழ்ந்தார்.**

# ஊழலை ஒழிக்க என்ன செய்யவேண்டும்?- 10 யோசனைகள்! லஞ்சம், ஊழலை ஒழிக்க முன்னெடுக்கவேண்டியவை

**சிவ இளங்கோ**

லஞ்சம், ஊழல்... எங்கு, யாரால், எப்போது தொடங்கியது என்பவை விடைதேட முடியாத கேள்விகள்தான். ஆனால், அவை புற்றுநோயைப்போல பரவி, இன்றைக்கு சமூகத்தைப் பாதிக்கும் முக்கியப் பிரச்னையாக உருவெடுத்து நிற்கிறது. சாமான்யன் தொடங்கி நாடு வரை வளர்ச்சி, முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக மாறிவிட்டன. ஒவ்வொரு தனிமனிதனையும் பாதிக்கும் ஊழல், சமூகத்தின் ஆணிவேர் வரை புரையோடிக் கிடக்கிறது.

"முன்பெல்லாம் கடமையை மீறுவதற்குத்தான் லஞ்சம் கொடுக்க வேண்டிய நிலை இருந்தது. ஆனால் தற்போது, கடமையைச் செய்யவே லஞ்சம் தரவேண்டிய அவலநிலை ஏற்பட்டதுதான் மிகவும் வேதனையான விஷயம். இப்படி சமூகத்தில் அடி ஆழம்வரை ஊடுருவிய ஊழலை ஒழிக்க வேண்டும் என்றால், ஒரு நாளில் சாத்தியமில்லை. அதற்கான முன்னெடுப்புகளைத் தனிநபர்கள் தொடங்கி, அரசாங்கம் வரை இணைந்து செயல்படுத்தினால்தான் சாத்தியம்" என்கிறவர், அதற்கு என்னென்ன விஷயங்களை செயல்படுத்த ம்வேண்டும் என்றும் விரிவாகப் பேசினார்.

1 **அறிவிப்புப் பலகைகள் அவசியம்**

"ஒவ்வோர் அரசு அலுவலகங்களிலும் அந்த அலுவலகத்தின் பணி, ஒவ்வொரு சேவைக்கும் எத்தனை நாட்கள் ஆகும் என்பது பற்றிய அறிவிப்புப் பலகை வைத்திருக்க வேண்டும். ஒவ்வோர் அரசு அலுவலகத்திலும் லஞ்சம் தொடர்பான புகார் எண், முகவரி இடம் பெற வேண்டும் என்ற அரசாணையே இருக்கிறது. இன்றைக்கு பெரும்பாலான அரசு அலுவலகங்களில் அறிவிப்புப் பலகைகள் இருப்பதில்லை. அவற்றை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதேபோல சாலைகள், பாலங்கள், தூர் வாருதல் என அரசுப் பணிகள் நடைபெறும் இடங்களில் அது தொடர்பான அறிவிப்புகள் பலகையில் இடம்பெற வேண்டும். அதாவது, எந்த வகையான பணி, ஒதுக்கப்பட்டுள்ள தொகை, முடிவடையும் காலம் என அனைத்துத் தகவல்களும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். உதாரணத்துக்கு, சாலை அமைக்கிறார்கள் என்றால் அது தார்ச் சாலையா, சிமென்ட் சாலையா, எத்தனை அடி தடிமனில் அமைக்கப்படுகிறது, எத்தனை கிலோமீட்டர் உள்ளிட்ட தகவல்கள் இடம்பெற வேண்டும்.

2 **ஆன்லைன் சேவை உதவும்**

எந்தவொரு அரசு சேவை பெறுவதற்குமே நேரிசலில்செல்ல வேண்டியதில்லை. எல்லாவற்றையும் ஆன்லைன் மூலம் நாம் நிறைவேற்றிக்கொள்ளலாம் என்பதைக் கொண்டுவர வேண்டும். அரசு திட்டங்களுக்கான டெண்டர் அறிவிப்பு போன்றவற்றையும் ஆன்லைனில் நடத்த வேண்டும். ஆன்லைனில் அனைத்து சேவைகளும் கொண்டு வருவது, லஞ்சம், ஊழல் முறைகேடுகள் காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துபோக வழிவகுக்கும்.

3 சட்டம் (**கடுமையான சட்டம் தேவை)**

பல வலுவான சட்டங்கள் இருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில்லை. அதோடு, புதிய சட்டங்களையும் இயற்ற வேண்டும். ஓர் அதிகாரி லஞ்சம் பெற்றதாக நிரூபிக்கப்பட்டால், அவரை நிரந்தரமாகப் பணிநீக்கம் செய்யும் கடுமையான சட்டங்களைக் கொண்டுவர வேண்டும். சட்டங்கள் கடுமையாக இல்லாததால், ஏற்கெனவே லஞ்சம் வாங்கி மாட்டிக்கொண்டவர்கள் கூட மீண்டும் மீண்டும் வாங்கும் நிலையே இருக்கிறது.

4 நீதிமன்றம் (**தினசரி விசாரணை வேண்டும்**)

ஒருவர் மீது லஞ்சம் பெற்றதாக வழக்கு தொடரப்பட்டால் கூட, அதற்கான தீர்ப்பு வருவதற்கு நீண்டகாலம் ஆகிறது. எனவே, ஊழல் வழக்குகளைத் தினசரி விசாரிக்க வழிவகை செய்ய வேண்டும். உடனடி விசாரணையும், அதைத் தொடர்ந்து எடுக்கப்படும் உடனடி நடவடிக்கையும் ஊழல்வாதிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தும்.

5 லோக் ஆயுக்தா (**'லோக் ஆயுக்தா' நடைமுறைப்படுத்துதல்**)

லஞ்ச ஒழிப்புத்துறை சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. அந்தத் துறையே முதல்வரின் கீழ் தான் வருகிறது. அமைச்சர்கள் உள்பட முதல்வர் மீதே ஊழல் புகார்கள் பல வந்திருக்கின்றன. பலரும் தண்டனை பெற்றிருக்கிறார்கள். நிலைமை இப்படி இருக்கும்போது, அவரின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு துறை எப்படி அவர் மீதே நடவடிக்கை எடுக்கும். எனவே, முதல்வரின் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் படைத்த 'லோக் ஆயுக்தா' அமைப்பை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

6 சான்றிதழ் (**பொதுமக்களுக்கான பொறுப்பு**)

ஒவ்வொருவரும், தங்களுக்கு எந்தச் சான்றிதழ் வாங்கினாலும் அதை அவசரகதியில் அணுகாமல், உரியகாலத்துக்கு முன்னரே தொடங்க வேண்டும். உதாரணத்துக்கு, பள்ளியில் சேர்க்க பிறப்புச் சான்றிதழ் வாங்க வேண்டும் என்றால், முன்னரே விண்ணப்பிக்க வேண்டும். கடைசி நேரத்தில் போய் சான்றிதழ் வாங்க நின்றால், நம் அவசரத்தைப் பயன்படுத்தி, லஞ்சம் கேட்பது அதிகாரிகளுக்கு சுலபமாகிவிடும். அதோடு, பிறப்புச் சான்றிதழ் தொடங்கி, மின் இணைப்புவரை ஒவ்வொரு சேவைக்கும் எவ்வளவு கட்டணம், எவ்வளவு நாள்களில் கிடைக்கும் என்பதைப் பற்றி தகவல்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும். இது, கூடுதல் கட்டணங்கள் கொடுப்பதையும், இடைத்தரகர்களைத் தவிர்க்கவும் உதவும்.

7 புகார் தெரிவியுங்கள் (**தகவல் அளிப்பவர்களுக்கு சன்மானம்**)

மக்களின் பயம்தான் ஊழல்வாதிகளின் பலம். லஞ்சம் கேட்பவர்கள் மீது தைரியமாகப் புகார் செய்ய முன்வர வேண்டும். லஞ்சப் புகார் கொடுப்பவர்களை ஊக்குவிக்கும் பணியை அரசே செய்ய வேண்டும். உதாரணத்துக்கு, லஞ்சம் மற்றும் ஊழல் புகார் செய்பவர்களுக்கு, முறைகேடுகளில் ஈடுபடுபவர்களிடம் எவ்வளவு அபராதம் வசூல் செய்யப்படுகிறதோ, அதில் 20 சதவிகிதம் பரிசுத் தொகையாக வழங்கலாம். பரிசுபெற விரும்பாதவர்கள், தங்களைப் பற்றிய தகவல்களைத் தரத் தேவையில்லை என்று அறிவிக்கலாம்.

8 ஆர்.டி.ஐ (**ஆர்.டி.ஐ சட்டம் பயன்பாடு**)

**ஆர்.டி... கவனிக்க வேண்டிய அடிப்படை விஷயங்கள்!**

2005-க்கு முன்பு எம்.எல்.ஏ, எம்.பி-க்கள்தான் அரசு ஆவணங்களையும் தகவல்களையும் பார்க்க முடியும், பெற முடியும் என்று இருந்தது. ஆனால், தகவல் அறியும் உரிமைச் சட்டம் வந்தபிறகு, சாதாரண குடிமக்களும் தகவல்களைப் பெற முடியும். இதன்மூலம், அரசுத்துறையில் நிலவும் ஊழல்களைச் சாதாரண மக்களாலும் வெளிக்கொண்டு வரமுடியும். இதைப் பயன்படுத்தும் முறையை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்

9 அரசு (**அரசின் கடமை என்ன?**)

மக்கள் நியாயமான வழியில் நடந்தாலே அவர்களுக்குரிய காரியங்கள் நடக்கும் என்ற நம்பிக்கையை அரசாங்கம்தான் ஏற்படுத்த வேண்டும். ஊழல்வாதிகளில்மீது உரிய நடவடிக்கை எடுத்தல், நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளுக்கு உறுதுணையாக இருத்தல்

என அரசு, ஊழலை ஒழிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தாலே 80 சதவிகித ஊழல் கட்டுக்குள் வந்துவிடும்.

10 வாக்கு (**தனிநபரின் பொறுப்பு**)

அதிகாரத்தால் மட்டும் ஊழல் நடப்பதில்லை. ஊழலற்ற தேசமாக மாற வேண்டுமானால், பொதுமக்களின் மனப்பான்மை மாற வேண்டும். அதுதான் அடிப்படை. எந்தவொரு பணிக்கும் லஞ்சம் கொடுக்க மாட்டோம்; வாங்க மாட்டோம் என்று உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். அதிகாரிகள் கட்டுப்படுத்தும் அரசியல் தலைவர்களையும் கட்சிகளையும் அடையாளம் கண்டு தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்தலில் பணம் வாங்கிக்கொண்டு ஓட்டளிக்க மாட்டோம் என்றும் உறுதியுடன் நாம் செயல்பட்டால் லஞ்சம், ஊழலை ஒழிக்கலாம்" என்றார்.

---

## ஊழலில் இருப்பிடமாக மாறி இருக்கும் இறப்பு, பிறப்பு சான்றிதழ்கள் - ஆன்லைன் முறையிலும் லஞ்சம்!

ஊழலில் இருப்பிடமாக இருந்து வரும் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை வழங்கும் முறையில் ஆன்லைனில் கூட லஞ்சம். “லஞ்சம் தவிர்ப்போம், நெஞ்சை நிமிர்ப்போம்” என்று தமிழக அரசு அலுவலகங்களில் எழுதப்பட்டு இருக்கிறது. ஆனாலும் அனைத்து அரசு அலுவலகங்களில் லஞ்சம் கொடுத்தால் தான் காரியம் நடக்கிறது என்பது எழுதப்படாத விதியாக இருக்கிறது. ஒரு மனிதன் பிறந்தவுடன் அவனுக்கான பிறப்பு சான்றிதழ் பெறுவதில் தொடங்குவது முதல், அவன் இறந்த பிறகும் பெறப்படும் இறப்பு சான்றுகள் வரை லஞ்சம் தொடர்கிறது. அரசு அலுவலகங்களில் லஞ்சத்தை முதற்கட்டமாக ஒழிக்க வேண்டும் என்பதற்கு பெரும்பாலான அரசு சேவைகளை தற்போது டிஜிட்டல் முறையில் கொண்டு வந்து இருக்கின்றது.

ஆனால் இது குறித்து மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததும் லஞ்சம் வாங்கிய ஆகவேண்டும் என்ற அரசு ஊழியர்களின் எண்ணமும் லஞ்சத்தை இன்னும் உயிரோடு வைத்து இருக்கிறது. கடந்த காலங்களில் அரசு அலுவலர்களுக்கு நேரில் சென்று பெற்று வந்த பல சேவைகளை இன்று வீட்டில் இருந்து டிஜிட்டல் மூலம் தற்போது பெற முடியும். உதாரணமாக பிறப்பு இறப்பு சான்றிதத்தில் கூறலாம். முன்பெல்லாம் அரசு மற்றும் தனியார் ஆஸ்பத்திரிகளில் நிகழும் பிறப்பு மற்றும் இறப்பு அந்த ஆஸ்பத்திரியிலிருந்து எழுதி உள்ளாட்சித் துறைக்கு அனுப்புவார்கள். அதனை உள்ளாட்சித் துறையினர் பதிவு செய்வதற்கு குறைந்தபட்சம் ஒரு மாதம் ஆகும்.

அதன் பின் பொதுமக்கள் உள்ளாட்சித் துறை அலுவலகத்திற்கு அலையாய் அலைந்து பிறப்பிடம் சான்றிதழ்களைப் பெற முடியும். இந்த பிரச்சினையை தீர்ப்பதற்காக டிஜிட்டல் முறையில் பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது ஆஸ்பத்திரிக்களின் நிகழும் இறப்புகள் உடனடியாக ஆஸ்பத்திரி மூலமாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உள்ளாட்சி அமைப்பு அலுவலக ஆய்வு செய்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் பொதுமக்கள் எந்த ஒரு அரசு அலுவலகத்திற்கும் செல்லாமல் வீட்டில் இருந்தபடியே சான்றுதல்களைப் பெற முடியும். ஆனால் பொது மக்களுக்கு இந்த இணையதளம் குறித்து தெரியாது தான் தற்போது உள்ளாட்சி அலுவலகங்களுக்கு அலையாய் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இதனை பெறுவதற்காக பிறப்பு சான்றிதழ் கொடுக்க ரூபாய் 1000 வரை லஞ்சம் பெறுகிறார்கள். இனி லஞ்சம் இல்லாமல் பெறுவதற்கான நடைமுறையை உருவாக்க வேண்டும் என்று பொதுமக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

## *ஐபிசி (IPC) பிரிவுகளின் பொருளை அறிந்து கொள்ளுங்கள்*

*பிரிவு 307* = கொலை முயற்சி
*பிரிவு 302* = கொலைக்கான தண்டனை
*பிரிவு 376* = கற்பழிப்பு
*பிரிவு 395* = கொள்ளை
*பிரிவு 377* = இயற்கைக்கு மாறான செயல்
*பிரிவு 396* = கொலை செய்யும் போது கொலை
*பிரிவு 120* = சதி
*பிரிவு 365* = கடத்தல்
*பிரிவு 201* = ஆதாரங்களை அழித்தல்
*பிரிவு 34* = பொதுவான நோக்கம்
*பிரிவு 412* = ஊர்சுற்றுவது
*பிரிவு 378* = திருட்டு
*பிரிவு 141* = சட்டவிரோத சட்டசபை
*பிரிவு 191* = தவறான ஆதாரங்களை அளித்தல்
*பிரிவு 300* = கொலை
*பிரிவு 309* = தற்கொலை முயற்சி
*பிரிவு 310* = மோசடி
*பிரிவு 312* = கருக்கலைப்பு
*பிரிவு 351* = தாக்குதல்
*பிரிவு 354* = பெண் அவமானம்
*பிரிவு 362* = கடத்தல்
*பிரிவு 415* = மோசடி
*பிரிவு 445* = வீடு உடைத்தல்
*பிரிவு 494* = வாழ்க்கைத் துணையின் வாழ்நாளில் மறுமணம்
*பிரிவு 499* = அவதூறு
*பிரிவு 511* = ஆயுள் தண்டனையுடன் தண்டிக்கக்கூடிய குற்றங்களைச் செய்ய முயற்சித்ததற்கான தண்டனை.

இதுபோன்ற சில உண்மைகள் நம் நாட்டில் உள்ளன, இதன் காரணமாக எங்களுடைய உரிமைகள் பறிக்கப்படுவதைப் பற்றிய தகவல்கள் எங்களிடம் இல்லை. எனவே இது போன்ற ஏதாவது செய்வோம்.

1) **மாலையில் பெண்களை கைது செய்ய முடியாது*** குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 46 ன் கீழ், இந்திய காவல்துறை எந்தவொரு பெண்ணையும் மாலை 6 மணிக்குப் பிறகு, காலை 6 மணிக்கு முன்னதாக கைது செய்ய முடியாது. காவல்துறையினர் அவ்வாறு செய்தால், கைது செய்யப்பட்ட காவல்துறை அதிகாரி மீது புகார் (வழக்கு) பதிவு செய்யப்படலாம். இது அந்த காவல்துறை அதிகாரியின் வேலையை ஆபத்தில் ஆழ்த்தக்கூடும்.

2) **சிலிண்டர் வெடித்ததால் உயிர் மற்றும் சொத்து இழப்பு குறித்து ரூ .40 லட்சம் வரை காப்பீட்டுத் தொகையை கோரலாம்*** பொது பொறுப்புக் கொள்கையின் கீழ், எந்தவொரு காரணத்திற்காகவும் உங்கள் வீட்டில் ஒரு சிலிண்டர் வெடித்து, நீங்கள் உயிர் மற்றும் சொத்துக்களை இழக்க நேரிட்டால், நீங்கள் உடனடியாக எரிவாயு நிறுவனத்திடமிருந்து காப்பீட்டுத் தொகையை கோரலாம். எரிவாயு

நிறுவனத்திடமிருந்து ரூ .40 லட்சம் வரை காப்பீட்டுக் கோரலாம் என்று உங்களுக்குச் சொல்வோம். நிறுவனம் உங்கள் கோரிக்கையை மறுத்துவிட்டால் அல்லது ஒத்திவைத்தால், அதைப் புகார் செய்யலாம். குற்றம் நிரூபிக்கப்பட்டால், எரிவாயு நிறுவனத்தின் உரிமத்தை ரத்து செய்யலாம்.

3) **எந்த ஹோட்டலும் 5 நட்சத்திரங்களாக இருந்தாலும்… நீங்கள் இலவசமாக தண்ணீர் குடிக்கலாம் மற்றும் கழுவும் அறையைப் பயன்படுத்தலாம்*** இந்திய தொடர் சட்டம், 1887 இன் படி, நீங்கள் நாட்டின் எந்த ஹோட்டலுக்கும் சென்று தண்ணீர் கேட்கலாம், மேலும் அந்த ஹோட்டலின் கழுவும் அறையையும் பயன்படுத்தலாம். ஹோட்டல் சிறியது அல்லது 5 நட்சத்திரங்கள், அவர்களால் உங்களைத் தடுக்க முடியாது. ஹோட்டல் உரிமையாளர் அல்லது எந்தவொரு ஊழியரும் உங்களை குடிநீர் அல்லது கழுவும் அறையைப் பயன்படுத்துவதைத் தடுத்தால், நீங்கள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். உங்கள் புகார் அந்த ஹோட்டலின் உரிமத்தை ரத்து செய்யக்கூடும்.

4) **கர்ப்பிணிப் பெண்களை வெளியேற்ற முடியாது-*** மகப்பேறு நலச் சட்டம் 1961 இன் படி, கர்ப்பிணிப் பெண்களை திடீரென நீக்க முடியாது. உரிமையாளர் முதல் மூன்று மாதங்களுக்கு ஒரு அறிவிப்பைக் கொடுக்க வேண்டும், மேலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் செலவுகளில் சிலவற்றைச் செலுத்த வேண்டும். அவர் இதைச் செய்யாவிட்டால், அவர் மீது அரசு வேலைவாய்ப்பு சங்கத்தில் புகார் அளிக்க முடியும். இந்த புகாரின் காரணமாக, நிறுவனம் மூடப்படலாம் அல்லது நிறுவனம் அபராதம் செலுத்த வேண்டியிருக்கும்.

**உங்கள் புகாரை எழுத காவல்துறை அதிகாரி மறுக்க முடியாது*** ஐபிசியின் பிரிவு 166 ஏ படி, எந்தவொரு போலீஸ் அதிகாரியும் உங்கள் புகார்களை பதிவு செய்ய மறுக்க முடியாது. அவர் இதைச் செய்தால், அவர் மீது மூத்த போலீஸ் அலுவலகத்தில் புகார் அளிக்க முடியும். அந்த காவல்துறை அதிகாரி குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவர் குறைந்தது *(6) *மாதம் முதல் 1 வருடம் வரை சிறையில் அடைக்கப்படலாம் அல்லது அவர் வேலையை இழக்க நேரிடும்.

இந்த சுவாரஸ்யமான உண்மைகள், அவை நம் நாட்டின் சட்டத்தின் கீழ் வருகின்றன, ஆனால் அவை எங்களுக்குத் தெரியாது. இதுபோன்ற பல சுவாரஸ்யமான விஷயங்களை உங்கள் முன் வைத்திருப்பது எங்கள் முயற்சியாக இருக்கும், இது உங்கள் வாழ்க்கையில் பயனுள்ளதாக இருக்கும்.

*இந்த செய்தியை உங்களுடன் வைத்திருங்கள், இந்த உரிமைகள் எப்போது வேண்டுமானாலும் கைக்கு வரக்கூடும்.*

**தவிக்க முடியாத காரணங்களால், இவ்விதழில் தலைவர் மடல் பிரசுரிக்க முடியவில்லை.**
**பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்**
**அடுத்த இதழில் வழக்கம் போல் தலைவர் உரை இடம் பெறும்**

## செயற்குழுக் கூட்டம் (27-11-2022)

இன்று நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் உப தலைவரும், பொது செயலாளரும் மூன்று செயற்குழு உறுப்பினர்களும், பார்வையாளர்களாக இரண்டு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. இயக்கத்தின் அக்டோபர் மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. சென்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில் கூறியபடி அனைத்து மாவட்டங்கள், மற்றும் கிளைகளுக்கு மூண்றாண்டு வரவு செலவு கணக்குகள், உறுப்பினர் முதலியவற்றைக் கேட்டு கடிதங்கள் எழுதப்பட்டன. அவற்றில் கடலூர் மாவட்டத்தை தவிர மற்ற மாவட்டங்களிலிருந்து பதில் ஏதும் வரவில்லை. எனவே, அனைத்து மாவட்டங்கள்/ கிளை அலுவலர்களுக்கு மீண்டும் ஒரு முறை நினைவூட்டக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. எந்த ஒரு பதிலும் 31/12/2022-குள் கிடைக்கப் பெறாவிடில், சம்மந்தப்பட்ட கிளைகளை மூடி உத்திரவிட பொதுச்செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து தீர்மானிக்கப்படுகிறது.

3. மாவட்ட பொறுப்பாளர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண்களை நேர்மை நெறியில் வெளியிடுவது என தீர்மானிக்கப்படுகிறது.

4. எல்லா மாவட்டங்களிலும், கிளை அமைப்புகளிலும் உறுப்பினர்கள் அவரவர் சூழ்நிலைக்கேற்ப **STICKER COMPAIGN- துண்டு பிரசுரம்** அல்லது விளம்பர ஒட்டி, இயக்கத்தை முன்னிறுத்த வேண்டும்.. **டிசம்பர் 10ம் நாள் உலக மனித உரிமை தினமாக** அனைத்து மாவட்ட/ கிளைகளில் கொண்டாட வேண்டும். சென்னையில் காவல் துறையின் அனுமதி பெற்று நடத்தும் பொறுப்பை, திரு. நஃபீஸ் அஹமத் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

5. அலுவலகத் தொடர்புக்கு தனியாக ஒரு தொலைபேசி எண் தேவைப்படின், அதைப் பெற்றுக்கொள்ள பொதுச்செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து தீர்மானிக்கப்படுகிறது

6 **செந்தில் பாலாஜி வழக்கு**: தற்போது சென்னை உயர்நீதிமன்றம், நிலுவையில் உள்ள இரு குற்றவழக்குகளைத் தொடர இயலாத வண்ணம், இவ்வழக்குகளை மீண்டும் ஆரம்பம் முதல் புலனாய்வு செய்ய உத்திரவு பிறப்பித்துள்ளது. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொதுச்செயலாளர் தெரிவித்ததால், இது போன்று எத்தனை வழக்குகள் வந்தாலும், தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி ஊழல்வாதிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தரும் வரை சட்ட போராட்டம் நடத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க, பொதுச்செயலாளர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி முனைப்புடன் செயல்பட கேட்டுக்கொண்டு ஏக மனதாக தீர்மானிக்கப்படுகிறது.

7. நீதி மன்றத்தில் அதிகமாக வாய்தா வழங்குவதால் தீர்ப்புகள் தாமதமாகின்றன. தாமதமான நீதி சில சமயம் மறுக்கப்பட்ட நீதியாகிறது. இவற்றை நிவர்த்தி செய்ய வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். வாய்தாவுக்கு அபராதம் விதித்தோ, வழக்குறைஞர்களுக்கு தற்கால இடைநீக்கமோ செய்து சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும் என்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்க பொதுச்செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து தீர்மானிக்கப்படுகிறது

8. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

ந சுப்ரமணியன்.
தலைவர்

V கார்த்திகை ராஜன்
பொதுச் செயலாளர்

# பட்டினி தேசமாய் மாறிக் கொண்டிருக்கும் பாரத தேசம்!

*-பீட்டர் துரைராஜ்*

October 21, 2022(ஆறம் ஆன்லைன்)

***பசி, பட்டினி,வறுமை, வேலை இல்லாத திண்டாட்டம் என ஒரு புறமும், உலக பணக்காரர்களுக்கு போட்டி போடக் கூடிய அதானி, அம்பானி போன்ற வளமையான சிறு கூட்டம் மறு புறமுமாக இந்தியா பிளவுண்டு வருகிறது! பணக்காரர்களை மேலும் பணக்கார்களாக்கவும், வறியவர்களை மேலும் வலுவற்றவர்களாக்கவும் ஓர் ஆட்சி நடக்கிறது!***

*2 030* ***க்குள் உலகத்தில் பட்டினியை ஒழிக்க வேண்டும் என்ற குறிக்கோளோடு, ஜெர்மனியைச் சார்ந்த ஒரு அரசு சாரா நிறுவனம், உலகப் பட்டினி குறியீட்டு எண்*** (Global Hunger Index) என்ற ஒரு அளவுகோளை வருடம்தோறும் வெளியிட்டு வருகிறது.

கடந்த வாரம் அது வெளியிட்ட பட்டியலில் இந்தியா 107 வது இடத்தில் இருக்கிறது என்று கூறியுள்ளது. 121 நாடுகள் கொண்ட பட்டியலில் இந்தியா மிகவும் பின்தங்கி உள்ளது.. பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், வங்கதேசம் போன்ற நாடுகளை விட இந்தியா பின்தங்கி உள்ளது. 2021 ம் ஆண்டில் இருந்த தர வரிசையை விட (101) ல் ஆறு இடங்கள் பின்தங்கிவிட்டது என இந்த அறிக்கை கூறுகிறது.

வறுமை, பச்சிளம் குழந்தைகள் மரண விகிதம், குறைந்த பட்ச ஊதியம், உணவுப் பாதுகாப்பு போன்றவைகளைக் குறித்து அக்கறை காட்டாத ஊடகங்கள் கூட இந்த செய்தியை வெளியிட்டுள்ளன.






இந்த அறிக்கை வெளிவந்த உடனேயே, பாஜக ஆதரவாளர்கள் கொந்தளித்தனர். “இந்தியாவில் உணவு தானியம் போதுமான அளவுக்கு உள்ளது. இந்தியா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்கிறது. இந்தியாவின் பெயரைக் கெடுக்கும் விதமாக பொறுப்பற்ற முறையில் தயாரித்து, அறிக்கையை வெளியிட்ட ஜெர்மனியைச் சார்ந்த அரசு சாரா நிறுவனத்தின் மீது இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று ஆர்எஸ்எஸ் - ஐச் சார்ந்த ‘சுதேசி ஜாக்ரன் மன்ச்’ என கோபத்தை வெளிப்படுத்தியது.

அதே சமயம் இந்தியாவில் உலக பணக்காரர்கள் வரிசையில் இணைபவர்கள் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இந்தியாவில் உணவுப் பொருட்கள் மிக பிரம்மாண்டமாக வீணடிக்கபடுவதையும் குளோபல் இண்டக்ஸ் (GLOBAL HUNGER INDEX) சுட்டிக்காட்டுகிறது! உண்மையில் நாம் நம்மை சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

பட்டினிக் குறியீடு என்பதை மதிப்பிடச் சில அளவு கோல்கள் கடைபிடிக்கபடுகின்றன. குறிப்பாக, ஒவ்வொரு நாட்டிலிருந்தும் நான்கு அம்சங்களுக்கான தகவல்கள், புள்ளிவிபரங்கள் சேமிக்கப்படுகின்றன. முதலாவதாக பசி, பட்டினியில் வாடும்

மக்களின் சதவீதம். இரண்டாவது, ஐந்து வயதுக்குட்பட்ட நலிந்த குழந்தைகள்,. மூன்றாவது, குழந்தைகள் தங்கள் வயதிற்கேற்ற உயரமின்றி குன்றிப் போயிருத்தல், நான்காவது, ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம். இவற்றை வைத்து ஒவ்வொரு நாட்டிற்கும் மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன.

இது குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டபோது, “தன்னுடைய நடவடிக்கையினால் பொருளாதாரம் பாதிப்பு அடைந்து விட்டது என்று சொல்லி, தவறுக்கு பொறுப்பேற்று இங்கிலாந்து பிரதம மந்திரி ராஜினாமா செய்துள்ளார். அதுபோல உண்மையை ஒத்துக்கொண்டு, நிலைமையை மேம்படுத்தும் ஆட்சியாளர்கள் இந்தியாவில் இருக்கிறார்களா?” என்று எதிர்க் கேள்வி கேட்டார், ஆய்வாளரான கீதா நாராயணன்.

”கொரோனாவினால் ஏற்பட்ட கடன் தொல்லையில் இருந்து சிறு, குறு தொழில்கள் இன்னமும் மீளவில்லை. நிரந்தர வேலை என்பது இப்போது இல்லை; ஒப்பந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. குறைந்த பட்ச ஊதியத்தை அதிகரிக்கவில்லை. இதனை சரி செய்யும் வகையில் இந்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய தொழிலாளர் சட்டத்தில் ஏதுமில்லை. விவசாயம் செய்வதில் இருந்து விவசாயிகள் வெளியேறுகிறார்கள். விலைவாசி அதிகரித்து உள்ளது. உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாக மாறியுள்ளது. இந்த நிலையில் உணவு இறையாண்மையை (Food Soverignity) இந்தியா எப்படி எட்ட இயலும்” என்றார் கீதா நாராயணன்.

இந்த அறிக்கையை வெளியிட்ட **welth ungerhilfe** நிறுவனம் கடந்த அறுபது ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இது ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளிடம் நிலவும் ஊட்டச்சத்து குறைவு (malnourishment), உயரத்துக்கு ஏற்ப எடை இல்லாமை, வயதுக்கேற்ற எடை இல்லாமை, மரணவிகிதம் ஆகிய காரணிகளை மையமாக வைத்து இந்தப் பட்டியலை தயாரித்துள்ளது.

இது குறித்து மருத்துவர் ஜி.ஆர்.இரவீந்திரநாத்திடம் கேட்டதற்கு ” இந்தியாவில் உணவு உற்பத்தியில் பெருநிறுவனங்கள் பலன் பெரும்வகையில் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. இது மக்கள் நலனுக்கு எதிரானது.

**மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்திரநாத்**

**விவசாயிகளுக்கான மானியத்தை** அதிகரிக்க வேண்டும். வளரும் நாடுகள் தங்கள் நாட்டு விவசாயிகளுக்கு மானியம். தருகின்றன. உரம், பூச்சிக் கொல்லி மருந்து, விதை போன்ற இடுபொருட்களை குறைந்த விலையில் வழங்கிட வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் தானியங்களை அரசே கொள்முதல் செய்ய வேண்டும். அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை உறுதிசெய்ய வேண்டும்.

கொள்முதல் செய்யப்படும் உணவு தானியங்களை சேமிக்க கிட்டங்கிகளை அதிகரிக்க வேண்டும். குளிர்சாதன வசதி (Cold chain storage) இருந்தால்தான், போக்குவரத்தில், சேமிப்பில், விநியோகத்தில் உணவுப் பொருட்கள் வீணாவதை குறைக்க முடியும். நுகர்வோருக்கு குறைந்த விலையில் உணவுப் பொருட்களை கொடுக்க வேண்டும். இப்படி செய்தால் விவசாயிகளும் பலன்பெறுவர்; பொதுமக்களும் பலன்பெறுவர். இடைத்தரகர் தலையீடு குறையும்.

ஏழு பன்னாட்டு நிறுவனங்கள் உலக உணவு தானிய வர்த்தகத்தில் 85 விழுக்காட்டை கட்டுப்படுத்துகின்றன. மூன்று பன்னாட்டு நிறுவனங்கள் உலக வாழைப்பழ வர்த்தகத்தில் 80 விழுக்காட்டை கட்டுப்படுத்துகின்றன. உணவுப் பொருட்கள் பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்குள் சென்று விடுவது இந்திய மக்களை மட்டுமல்ல, உலக மக்களையே பாதிக்கிறது. உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது. எனவே, பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உணவுப் பொருள் வர்த்தகம் சென்றுவிட்டதை மீட்க

வேண்டும். ஆன்லைன் வர்த்தகம், பதுக்கல் போன்றவை தடுக்கப்பட வேண்டும். உணவுப் பொருட்களின் விலை கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்ற அறம் சிதைக்கப்படுகிறது. அமெரிக்காவின் தனிநபர் ஆண்டு தானிய நுகர்வு ஏறத்தாழ 1100 கிலோ இந்தியா போன்ற நாடுகளில் அது வெறும் 100 கிலோவிற்கு கீழே உள்ளது. மேலை நாடுகளில் அதீத உணவுப் பயன்பாடு உள்ளது. ஆனால், ஏழை நாட்டு மக்களோ தானிய உணவு கூட கிட்டாமல் பட்டினியால் இறக்கின்றனர்.

இதை நடைமுறைப்படுத்தும் வகையில் கொள்கை முடிவுகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டும். கரும்பு, மக்காச் சோளம் போன்ற விவசாயப் பொருட்களில் இருந்து எத்தனால் என்ற எரிபொருள் தயாரிக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும். ஊட்டச்சத்து, உணவுப் பாதுகாப்பு, விலைவாசியை கட்டுப்படுத்துதல், குறைந்தபட்ச ஊதியத்தை உறுதிசெய்ய வேண்டும்.

ஒன்றிய கார்ப்பரேட் அரசு, ஒருபுறம் கார்ப்ரேட்களின் நலன்களுக்கு உகந்த வேளாண்மை கொள்கைகளை, சட்டங்களை உருவாக்கி செயல்படுத்த முயல்கிறது. மறுபுறம் மக்களைத் திசை திருப்ப "இந்துத்துவா" என்ற மதவெறி அரசியலை மூர்க்கத்தனமாக நடைமுறைப் படுத்துகிறது. மக்களை சாதி, மத, இன அடிப்படையில் பிளவுபடுத்தி, ஒன்றுபட்ட மக்கள் போராட்டத்தை மழுங்கடிக்கிறது.

மாநில அரசுகள் வசம்தான் நிலங்கள் உள்ளன. எனவே நிலங்களை அதிக அளவில் விவசாயப் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதும், விவசாய நிலங்களை இதர பயன்பாட்டிற்காக மாற்றப்படுவதை தடுத்திட வேண்டும். பாசன வசதிகள் மேம்படுத்த வேண்டும். மீன், முட்டை, பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். மக்களுடைய வாங்கும் சக்தி அதிகமானால்தான் நுகர்வு அதிகரிக்கும்" என்றார் சமூக, சமுத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத்.

"இந்த அறிக்கை தவறானது, ஆய்வு செய்த வழிமுறைகளில் பிழை உள்ளது" என இந்திய அரசின் மகளிர் & குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

**கீதா நாராயணன்**

"தமிழ்நாட்டில் நகர்மயமாக்கல் அதிகம் நடந்துள்ளது. கிராமத்தில் இருந்தாலும், வேலைக்காக நகரத்திற்கு வந்து செல்பவர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் பொது விநியோகத்திட்டம் நன்கு செயல்படுகிறது. இதனால் தமிழகம் சற்று நல்ல நிலையில் உள்ளது. அதே சமயம் வேறுசில நடவடிக்கைகளும் தேவை. உதாரணமாக, புறம்போக்கு நிலங்களை வறிய நிலையில் உள்ள பெண்கள் குழுவுக்கு விவசாயம் செய்வதற்கு தமிழக அரசு கொடுக்க வேண்டும்" என்றார் கீதா நாராயணன்.

இந்தியாவை விட பாகிஸ்தான் (99வது இடம்), நேபாளம் (81 வதுஇடம்), வங்காள தேசம் (84 வது இடம்) பட்டினிக் குறியீட்டு எண்ணில் மேம்பட்டு இருக்கிறதே எப்படி?" இந்தியா இராணுவத்திற்கு அதிகமாக செலவழித்து வருகிறது. எனவே, உணவு உத்தரவாதம், மருத்துவம், சுகாதாரம், கல்வி போன்றவைகளுக்கு ஒதுக்கப்படும் தொகை குறைகிறது. இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்தால் மக்கள் மேம்பாடு அதிகரிக்கும் " என்றார் ஜி.ஆர். இரவீந்திரநாத்.

நம் குழந்தைகளுக்கு வயதுக்கு ஏற்ற எடை உள்ளதா ? உயரத்திற்கேற்ற எடை உள்ளதா ? என்ற கேள்விகளுக்கு ஆட்சியாளர்கள் பதில் தேடினால், பட்டினியைப் போக்க முடியும்.

**கட்டுரையாளர்; பீட்டர் துரைராஜ்**

# தொங்கு பாலத்தை, தூக்கு பாலமாக்கிய மோடியின் சீடர்கள்!

***-சாவித்திரி கண்ணன்***

November 3, 2022

**ஊழல், கமிஷன், உலுத்துப் போன நிர்வாகம்! = 140 பேர் பலி!** கண்டெடுக்கப்பட்ட உடல்களை விட, காணாமல் போனவை அதிகமாம்! குஜராத் மோர்பி மச்சு ஆற்றின் தொங்கும் பாலம் அறுந்து விழுந்த விபத்து பல உண்மைகளை நமக்கு முகத்தில் அறைந்தாற் போலச் சொல்கிறது!

143 வருடமாக விபத்தின்றி உறுதியாக இருக்கும்படி பிரிட்டிஷ் அரசாங்கம் உருவாக்கியது, மச்சு ஆற்று மேம்பாலத்தை! அதை புதுப்பித்த குஜராத் பாஜக அரசாங்கத்தால் ஐந்து நாட்கள் வரை தான் அதன் உறுதி தன்மைக்கு பொறுப்பேற்க முடிந்துள்ளது!

எல்லாவற்றையும் தனியாரிடம் காண்டிராக்ட் விட்டு காசு, பணம் பார்க்கும் அம்சமாகவே இன்றைய அரசுகள் அணுகுகின்றன! எவ்வளவு கமிஷன்? யார்யாருக்கு அதில் பங்கு பிரிப்பது என்பதாக மட்டுமே இவர்கள் செயல்கள் உள்ளன! தரமாக கட்டுமானம் குறித்த அக்கறை அறவே இல்லை! ஒப்பந்தம் பெறும் ஒப்பந்தராரருக்கு அதில் முன்அனுபவம், திறமை இருக்கிறதா எனப் பார்ப்பதே இல்லை. வேண்டப்பபட்டவர் என்ற அடிப்படையிலோ, அதிக கமிஷன் அடிப்படையிலோ அனுபவமில்லாத ஒப்பந்ததாரருக்கு தருகிறார்கள். அவர் சப் காண்டிராக்ட் விட்டு கமிஷன் அடித்துக் கொள்கிறார். இதனால் உண்மையாக உழைப்பவர்களுக்கு உரிய பணம் கிடைப்பதில்லை. இதனால், வேலைகள் ஏனோ, தானோவென்று தான் நடக்கின்றன!





பாலம் உறுதியாக இருப்பதற்கான எந்த வேலையையும் இவர்கள் செய்யவில்லை. பாலத்தை தாங்கி பிடிக்கும் இரு முனைகளில் உள்ள இரும்பு தூண்களும், கேபிள்களும் துருப்பிடித்த நிலையில் இருந்ததை பொருட்படுத்தவில்லை. அவை மாற்றப்பட வேண்டும் அல்லது அவற்றை கிரிஷ் எண்ணெய்விட்டு தேய்த்து துருவையாவது அகற்றி பாதுகாக்கலாமே என இந்த ஏழுமாத வேலை திட்டத்தில் சிறுமுயற்சி கூட செய்யவில்லை. மாறாக பாலத்தின் எடையை மேலும் அதிகரிக்கும் வண்ணம் நடைமேடையை நான்கு அடுக்கு அலுமினிய தகடால் போட்டு உள்ளனர்.

இந்தப் பாலத்தில் ஒரே நேரத்தில் எத்தனை பேர் வரை அனுமதிக்கலாம் என திட்டவட்டமாக முடிவெடுத்து, அதை உறுதிபடச் செயல்படுத்தும் அக்கறையும் இல்லை. பண்டிகை நேரங்களில் கூடுதலான ஆட்களை ஏற்றி, அதிக பணத்தை அள்ளலாம் என முடிவெடுத்துள்ளனர். விபத்து நடந்த நேரத்தில் தொங்குபாலத்தில் சுமார் 500 பேர் இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. இது வரை சுமார் நூறு பேர் வரை தான் உயிரோடு

மீடக்கப்பட்டு உள்ளனர். இன்னும் பலரது சடலங்கள் மீடக்கப்படவே இல்லை. பாலத்தில் நடப்பது மனித உயிர்கள் என்ற மனிதாபிமானமே இல்லை.

கொடூர விபத்து நேர்ந்து விட்டது! ஆனால், உண்மையில் இது கொலை பாதகச் செயலே! தற்போது அந்த பாதகத்திற்கு காரணமான உண்மையான குற்றவாளிகள் யாருமே கைதாகவில்லை. நேரடி ஒப்பந்ததாரர் கைதாகவில்லை. அதாவது, இந்த ஒப்பந்தத்தை வாங்கி அஜந்தா நிறுவனத்தின் உரிமையாளர் கைதாகவில்லை! வாட்ச் தயாரிக்கும் கம்பெனி சம்பந்தமில்லாமல் ஏன் இந்த காண்டிராக்டை எடுத்தது? அதற்கு ஆர்டர் வழங்கிய அரசியல்வாதி யார்? அந்தத் துறையின் அமைச்சர் யார்? மாவட்ட கலெக்டர், நகராட்சி அதிகாரி யார்? யார்? இவர்களில் ஒருவருமே கைது செய்யப்படாமல் சாதாரண நிலையில் உள்ள 2 மேலாளர்கள், 2 துணை ஒப்பந்ததாரர்கள், டிக்கட் கிழித்து தந்த கிளர்க், வாட்ச்மேன் ஆகியோரை கைது செய்துள்ளனர்! இந்த லட்சணத்தில் ”இவர்களுக்காக கோர்டில் நாங்கள் யாரும் ஆஜராகமாட்டோம்” என மோர்பி மற்றும் ராஜ்கோட் மாவட்ட பார் கவுன்சில் முடிவெடுத்துள்ளது!

சம்பந்தப்பட்ட ஒரேவா நிறுவனத்தின் மேலாளர் தீபக் பரேக் என்பவர் கோர்ட்டில், ”கடவுளின் விருப்பத்தால் இது போன்ற ஒரு துரதிர்ஷ்டமான விபத்து நடந்துள்ளது” என விளக்கம் அளித்துள்ளார்! அப்படியானால், கடவுளின் விருப்படியே அவரையும், சம்பந்தப்பட்டவர்களையும் சிறையில் தள்ளுவதே உத்தமமாகும்! நேர்மைக்கும், நிர்வாகத் திறமைக்கும் பேர் போன பிரதமர் மோடியின் சீடர்கள் ஆட்சி செய்யும் மாநிலத்தில் தான் இவை யாவும் நடந்துள்ளது! சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் இந்த நேரம் ராஜீனாமா செய்திருக்க வேண்டாமா?

சொந்த மண்ணில் நடந்த விபத்தை விசாரிக்க மோடி மூன்று நாட்கள் ஏன் எடுத்துக் கொண்டார் என்பதற்கான காரணம், அவர் வரும் போது அந்த ஹாச்பிட்டல் பளபளப்பாக இருக்க வேண்டும் என பெயிண்ட் அடித்து புதுப்பிக்கும் வரை காத்திருந்தாராம்! ‘இப்படியான பிரதமர் இனிமேல் இது போல பாதிக்கப்பட்டவர்களை பார்க்க செல்லக் கூடாது’ என ஒரு விதியே கொண்டுவர வேண்டும். ஏனென்றால், மருத்துவமனை நிர்வாகம் பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சையில் அக்கறை கட்டுவார்களா? அல்லது பிரதமர் விசிட்டுக்கான ஏற்பாடுகளில் பதைபதைப்புடன் இருப்பார்களா? இடைப்பட்ட இந்த மூன்று நாட்கள் அந்த மருத்துவமனையில் பிரதமர் விசிட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நோயாளிகளுக்கு எவ்வளவு சிரமங்களை தந்தது என்பதை தனி ஸ்டோரியாகப் பண்ணலாம். அவ்வளவு அபத்தங்கள் நடந்துள்ளன!.

---

## இங்கிலாந்து பொருளாதார வீழ்ச்சிக்கு வித்திட்டவை எவை? - ஒரு தெளிவுப் பார்வை

நாட்டு மக்களில் 7-ல் ஒருவர் உணவு இன்றி உறங்கச் செல்கிறார்; 40 சதவீத மக்கள் உணவுக்கான செலவைக் குறைத்திருக்கிறார்கள்; ஏறக்குறைய 50 சதவீத மக்கள் மின் கட்டணத்தை குறைப்பதற்காக வெந்நீரில் குளிப்பதை தவிர்த்திருக்கிறார்கள் - இது எல்லாம் எந்த நாட்டில் தெரியுமா..? உலகின் அனைத்துக் கண்டங்களிலும் பல்வேறு நாடுகளை அடிமைப்படுத்தி, சூரியன் மறையாத நாடு என கடந்த நூற்றாண்டில் எந்த நாடு மார்தட்டிக்கொண்டதோ அந்த இங்கிலாந்தில்தான்.

இங்கிலாந்தின் பொருளாதாரம் மிக மோசமான நிலைக்குச் சென்றதால், அதன் அரசியல் ஆட்டம் கண்டது. பிரதமராக இருந்த போரிஸ் ஜான்சன் பதவி விலகினார். அவரை அடுத்து 45 நாட்களுக்கு முன்பாக பிரதமராக பதவியேற்ற லிஸ் ட்ரஸூம் தற்போது பதவி விலகியிருக்கிறார். இதையடுத்து, அடுத்த பிரதமரை தேர்வு செய்வதற்கான தேர்தலை ஆளும் கன்சர்வேடிவ் கட்சி எதிர்கொள்ள இருக்கிறது. 3 மாதங்களில் 3 பிரதமர்களை பார்த்த நாடு என்ற பெயரை இங்கிலாந்து பெறப் போகிறது. அரசியல்

நிலையின்மை காரணமாக அந்த நாடு பொருளாதார ரீதியாக மேலும் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது.

பொருளாதார சரிவு காரணமாக அரசியல் நிலையின்மை ஏற்பட்டுள்ளதை அடுத்து, இங்கிலாந்தின் பொருளாதார நிலை, சர்வதேச அளவில் விவாதப்பொருளாக மாறி இருக்கிறது. உண்மையில் இங்கிலாந்தின் பொருளாதார நிலை எப்படி இருக்கிறது? சற்றே விரிவாகப் பார்ப்போம்.

தொழில் துறை உற்பத்தியை சார்ந்த நாடு இங்கிலாந்து. இங்கிலாந்தில் விவசாய உற்பத்தி மிக மிக குறைவு. அந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உணவுப் பொருட்களின் பங்கு வெறும் 0.60 சதவீதம் மட்டுமே. இதுவே இந்தியாவில், 20 சதவீதத்திற்கும் மேல். உணவுப் பொருள் உற்பத்தி குறைவால், அந்த நாடு ஏறக்குறைய 50 சதவீத உணவுப் பொருட்களை இறக்குமதி மூலமே ஈடுகட்டுகிறது. விவசாய உற்பத்திக்கு உரிய முக்கியத்துவம் தராமல், தொழில் துறைக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்ததால் பிற நாடுகளை சார்ந்து இருக்க வேண்டிய கட்டகாயம் இங்கிலாந்துக்கு ஏற்பட்டது.

**தொழிற் துறைக்கு பின்னடைவு:**

இங்கிலாந்தின் மக்கள் தொகை 6.80 கோடி மட்டுமே. நாட்டின் தொழில் துறை மூலம் கிடைக்கும் உற்பத்தியோ நாட்டு மக்களின் தேவைக்கும் மிக அதிகமானது. தேவைக்கு அதிகமான உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்றால், இங்கிலாந்தின் உற்பத்திப் பொருட்களின் விலை சர்வதேச சந்தையில் போட்டி போடும் அளவுக்கு இல்லை. பணியாளர்களுக்கு அதிக ஊதியம் கொடுப்பதால், அதன் உற்பத்தி செலவு அதிகம். இதனால், அதன் உற்பத்தி பொருட்களின் விலையும் அதிகம். ஆனால், சீனாவோ, மிகக் குறைந்த விலைக்கு பொருட்களை விற்கக்கூடிய நாடாக சர்வதேச சந்தையை ஆக்கிரமித்திருக்கிறது. இதன் காரணமாக இங்கிலாந்தின் தொழிற் துறைக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

ஏற்றுமதியை அதிகரிக்க முடியாத அதேநேரத்தில் உணவுப் பொருட்கள், கச்சா எண்ணெய் உள்ளிட்டவற்றை அதிக அளவில் இறக்குதி செய்தாக வேண்டிய கட்டாயம் இங்கிலாந்து அரசுக்கு உள்ளது. இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு கோதுமை உள்ளிட்ட உணவுப் பொருட்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்து வந்த நாடு உக்ரைன். எரிபொருளை ஏற்றுமதி செய்து வந்த நாடு ரஷ்யா. இவ்விரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள போர் காரணமாக இங்கிலாந்துக்கான இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளது. அதோடு, அமெரிக்கா ரஷ்யாவை எதிர்ப்பதில் உறுதியாக இருப்பதால், இங்கிலாந்தும் ரஷ்யாவை எதிர்க்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

**காரணங்கள்:**

உணவுப் பொருள் உற்பத்தி குறைவு, தொழில்துறை மூலம் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை, உணவுப் பொருட்களையும், எரிபொருளையும் இறக்குமதி செய்தாக வேண்டிய கட்டாயம், கரோனா ஏற்படுத்திய பாதிப்பு, உக்ரைன் - ரஷ்யா போர் என பல்வேறு அம்சங்கள் சேர்ந்ததால், இங்கிலாந்தின் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது. தற்போது அந்த நாட்டின் பணவீக்கம் 10 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத உயர்வு. டாலருக்கு நிகரான பவுண்ட்டின் மதிப்பும் கடும் சரிவை சந்தித்து வருகிறது. முதலீடுகள் குறைந்ததால் வேலைவாய்ப்பின்மையும் அதிகரித்துள்ளது. நாட்டின் பொருளாதார நிலைமை பாதிக்கப்பட்டிருப்பதால் மக்களின் பொருளாதார நிலையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. விலைவாசி உயர்வால் செலவு அதிகரித்திருப்பதால் நடுத்தர மற்றும் ஏழை மக்கள் சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். இதன் காரணமாகவே, இங்கிலாந்தில் 7-ல் ஒருவர் உணவு இன்றி உறங்கச் செல்கிறார்; 40 சதவீத மக்கள் உணவுக்கான செலவை குறைத்திருக்கிறார்கள்; ஏறக்குறைய 50 சதவீத மக்கள் மின்

கட்டணத்தை குறைப்பதற்காக வெந்நீரில் குளிப்பதையும், கடுங்குளிரைப் போக்கி சூட்டை உண்டுபண்ணும் எந்திரத்தைப் பயன்படுத்துவதையும் தவிர்த்திருக்கிறார்கள்.

**லிஸ் ட்ரஸ் செய்த தவறுகள்:**

பொருளாதார நெருக்கடி காரணமாகவே பிரதமராக இருந்த போரிஸ் ஜான்சன் பதவி விலக வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார். அவரை அடுத்து லிஸ் ட்ரஸ், நாட்டின் புதிய பிரதமரானார். ஆனால், தேர்தல் பிரச்சாரத்தின்போது தன்னை ஆதரிக்காத காரணத்தால், கட்சியில் உள்ள திறமைசாலிகள் பலரை, பதவியில் அமர்த்துவதை தவிர்த்தார். இதன் காரணமாக அவரது அமைச்சரவையில் திறமைசாலிகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது.

தொழில்துறை வரியை பெருமளவில் குறைப்பதற்கான லிஸ் ட்ரஸ்ஸின் நடவடிக்கை அவரது பொருளாதார செயல்பாட்டை கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கியது. அரசின் முடிவுக்கு இங்கிலாந்தின் மத்திய வங்கியான சென்டரல் பேங்க் ஆ.்ப் இங்கிலாந்து கடும் எதிர்ப்பு தெரிவித்தது. லிஸ் ட்ரஸ் முட்டாள்தனமாக இயங்கி வருவதாக அவரது கட்சி எம்.பிக்களே விமர்சிக்கத் தொடங்கினார்கள்.

சொந்த கட்சியினரின் எதிர்ப்பை அடுத்து பதவி விலகும் முடிவை அறிவித்தார் லி ட்ரஸ். விரைவில் வேறு ஒருவர் பிரதமராக பதவி ஏற்க இருக்கிறார். ஆனால், யார் பிரதமராக பதவி ஏற்றாலும் எதுவும் ஒரே இரவில் மாறிவிடாது என கூறுகின்றனர் பொருளாதார நிபுணர்கள். குறைந்தபட்சம் ஓராண்டு காலத்திற்கு இங்கிலாந்து கடும் பொருளாதார நெருக்கடிகளை சந்தித்தே ஆக வேண்டும் என்கிறார்கள் அவர்கள்.

அதேநேரத்தில், இங்கிலாந்து எனும் நாட்டை நிர்வகிப்பதில் முக்கிய பங்காற்றும் பல்வேறு அமைப்புகள் சுதந்திரமாகவும் வலிமையாகவும் இருப்பதால், அந்த நாடு விரைவில் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீண்டு எழும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள். அதோடு, ஐரோப்பிய நாடுகளின் ஆதரவும் அமெரிக்காவின் ஆதரவும் இங்கிலாந்துக்கு இருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

தொழில் துறை உற்பத்தியில் மட்டுமின்றி, உணவுப் பொருள் உற்பத்தியிலும் ஒரு நாடு தற்சார்புடன் இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதை இங்கிலாந்து தற்போது உலகிற்கு உணர்த்திக்கொண்டிருக்கிறது. ஆயுத உற்பத்தியைக் கொண்டு உலகை ஆண்ட ஒரு நாடு, தற்போது உணவிற்காக தவித்துக்கொண்டிருக்கிறது என்பதுதான் பெரும் சோகம்.

---

## ரிஷி.சுனாக்

**நியாண்டர் செல்வன்**

ரிஷி.சுனாக்கின் தாத்தா அன்றைய பாரதம் இன்றைய பாகிஸ்தானில் இருக்கும் குஜ்ரன்வாலா பகுதியை பூர்விகமாக கொண்டவர். 1930க்களில் குஜ்ரன்வாலா நகரில் பெரிய கலவரம் மூண்டது. குஜ்ரன்வாலாவில் வசதியாக வாழ்ந்த பலர் அந்த ஊரை விட்டு குடிபெயர்ந்தார்கள். அப்படி சென்றவர்களில் ஒருவர் தான் ரிஷியின் தாத்தா. ப்ரிட்டிஷ் ஆட்சியில் இருந்த கென்யாவுக்கு குடிபெயர்ந்தார். அங்கே பிறந்தவர் தான் ரிஷியின் அப்பா.

பின்னாளில் கென்யாவுக்கு 1963ல் ப்ரிட்டன் சுதந்திரம் கொடுத்தது. கிழக்கு ஆப்பிரிக்காவில் கென்யா, உகாண்டா உள்ளிட்ட பல நாடுகளுக்கு இந்தியர்களை ஏராளமாக குடியமர்த்தி இருந்தது ப்ரிட்டன். பர்மாவிலும் இதேபோல் தான் நடந்தது. ப்ரிட்டிஷ் ஆட்சி நடந்த இடமெல்லாம் இந்திய மத்தியதர வர்க்கம் குடிபெயர்ந்து, வணிகர்களாகவும், குமாஸ்தாக்களாகவும் ப்ரிட்டிஷ் ஆட்சி நடைபெற வழிவகுத்தனர் இந்தியர்கள்.

ஆனால் பர்மாவில் இருந்து இந்தியர்கள் அடித்து விரட்டபட அதுவே காரணமாக அமைந்தது. ப்ரிட்டிஷ் ஆட்சியின் அள்ளக்கைகளாக உள்ளூர் மக்கள் இந்தியர்களைக்

கருதினார்கள். அதே மாதிரி பிரச்சனை ஆப்பிரிக்காவிலும் முளைத்தது. கிழக்கு ஆப்பிரிக்காவில் 250,000 இந்திய வம்சாவளியினர் ப்ரிட்டிஷ் பாஸ்போர்ட்டுடன் இருந்தார்கள். "ப்ரிட்டிஷ் ஆசியர்கள்" என அழைக்கப்பட்டார்கள். அவர்கள் பிறந்த ஊர்கள் பாகிஸ்தான், இந்தியா என இரு நாடுகளாக தற்போது பிரிந்து இருந்தன. அவர்களில் பலர் இந்தியாவை பார்த்ததே கிடையாது.

சுதந்திரத்துக்கு பின் அவர்களை கென்யா வெளியேற சொல்ல, அவர்கள் ப்ரிட்டனிடம் அடைக்கலம் கேட்க, ப்ரிட்டிஷ் அரசும் அவர்களை ப்ரிட்டனுக்கு அழைத்துக்கொண்டது. அப்படி சென்றவர் தான் ரிஷியின் அப்பா. ரிஷியின் அப்பா ப்ரிட்டனில் டாக்டராக பணியாற்றினார். டான்சானியாவில் இருந்து அகதியாக வந்த இந்திய வம்சாவளியை சேர்ந்த பெண்ணை மணந்துகொண்டார். அவர்களுக்கு பிறந்தவர் தான் ரிஷி சுனாக். பிறந்த ஆண்டு 1980. நல்ல வசதியான குடும்பம். ரிஷியும் நல்லா படிக்கும் மாணவன். ஸ்டான்போர்டுக்கு படிக்க செல்கையில் உடன் படிக்கும் அக்ஷதா மூர்த்தி எனும் பெண்ணுடன் காதலில் விழுந்தார். அவர் இன்போசிஸ் நாராயணமூர்த்தியின் மகள்.

அக்ஷதா மூர்த்தியிடம் தனிப்பட்ட முறையில் இருந்த இன்போசிஸ் பங்குகள் மூலமே அவர் ப்ரிட்டிஷ் அரசியை விட அதிக பணக்காரியாக இருந்தார். அவரை மணந்த பின் ரிஷியின் வாழ்க்கை எங்கேயோ சென்றுவிட்டது. சுக்ரதிசை அடித்தது. நிதி நிறுவனங்களில் வேலை செய்துகொண்டு இருந்தவர் கன்சர்வேடிவ் கட்சி சார்பில் அரசியலில் குதித்தார். எம்பி ஆனார். மந்திரி ஆனார். இப்போது பிரதமரும் ஆகிவிட்டார். பாரதத்தின் வம்சாவளி, இந்தியாவின் மருமகன், ஆனால் இந்தியர் அல்ல. ஆப்பிரிக்காவின் மகன், ஆனால் ஆப்பிரிக்கர் அல்ல. ப்ரிட்டிஷ் குடிமகன், ஆனால் அங்கே அவரை இந்தியர் என்கிறார்கள்.

தற்போதய பாகிஸ்தான் மூதாதயர் வாழ்ந்த இடம். ஆனால் அங்கே அவரை பாகிஸ்தானியாக கருதுவதில்லை. இனத்தால் பஞ்சாபி, ஆனால் சீக்கியர் அல்ல. அதனால் பெரியதாக அங்கேயும் உற்சாக வெள்ளம் கரைபுரன்டு ஓடவில்லை. ஆக உண்மையான க்ளோபல் சிட்டிசன் என ரிஷியை சொல்லலாம் ப்ரிட்டன் மற்றும் கன்சர்வேடிவ் கட்சி இரண்டும் எதிர்கொள்ளும் சவால்கள் ஏராளம். சாதிப்பாரா ரிஷி? மார்கரெட் தாட்சர் மற்றும் வின்ஸ்டன் சர்ச்சிலின் கட்சியையும், நாட்டையும் கரையேற்றுவாரா? பார்ப்போம்.

<u>இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.</u>

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

திரு **N** சுப்ரமணியன், தலைவர் **: 9444274352**
திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் **: 87783 12823**
திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் **: 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**


தொண்டு நிறுவனங்களிடம் 50 கோடி லஞ்சம்


திருச்சி லஞ்ச ஒழிப்பு பிரிவு புதிய டிஎஸ்பி மணிகண்டனின் ராஜ்ஜியத்தில் உய்யலாலா

### கோவையில் பரபரப்பு சம்பவம்

# லஞ்சத்தை வாங்கிட்டு ஜாமீன் தரலேன்னா எப்படி?

**பெண் ஆவேச கேள்வியால் நீதிபதி அதிர்ச்சி**

**பொய் சொல்லி ₹25 ஆயிரம் வாங்கிய வக்கீல் கைது**

**கோவை, நவ.11:** விபசார வழக்கில், கணவருக்கு ஜாமீன் எடுக்குமாறு கேட்ட பெண்ணிடம், நீதிபதி பெயரைச் சொல்லி லஞ்சம் வாங்கிய வக்கீலை போலீசார் கைது செய்தனர்.

கோவை பீளமேட்டில் விபசார வழக்கு ஒன்றில் முகமது ரியாஸ் என்பவரை கடந்த சில நாட்களுக்கு முன் போலீசார் கைது செய்தனர். இதனை தொடர்ந்து அவரது மனைவி லஜாஜெசிகா, சென்னையை சேர்ந்த எட்வின் ஜெயக்குமார் (39) என்ற வக்கீலை சந்தித்து, தனது கணவரை ஜாமீனில் வெளியே எடுக்க கூறியுள்ளார். இந்த வழக்கில் ஆஜராவதாக கூறிய எட்வின் ஜெயக்குமார், முதலில் ரூ.10 ஆயிரம் வாங்கியுள்ளார். பின்னர் ஜாமீன் வாங்க வேண்டும் என்றால் நீதிபதிக்கு ரூ.50 ஆயிரம் லஞ்சம் கொடுக்க வேண்டும் எனக் கூறி முன்பணமாக ரூ.25 ஆயிரம் வாங்கியுள்ளார்.

**திடுக்கிடும் குற்றச்சாட்டு:** இந்த நிலையில், முகமது ரியாஸின் ஜாமீன் மனு மீதான விசாரணை கோர்ட்டில் நேற்று முன்தினம் நடந்தது. விசாரணைக்குபின், ஜாமீன் மனுவை நீதிபதி தள்ளுபடி செய்தார். இதனால், அவரது மனைவி ஆத்திரமடைந்து, "லஞ்சத்தை வாங்கிட்டு இப்போ ஜாமீன் தரலேன்னா எப்படி?" என்று நீதிபதியிடம் ஆவேசமாக கேட்டார். இந்த திடுக்கிடும் குற்றச்சாட்டை கேட்டு, நீதிமன்றத்தில் இருந்தவர்கள் அதிர்ச்சியடைந்தனர். நீதிபதியும் ஒருகணம் திகைத்து, எழுந்து நின்றார். பின்னர், அந்தப் பெண்ணிடம், "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டார்.

**நீதிபதிக்கு லஞ்சம்:** அப்போது அவர், "என் கணவரை ஜாமீனில் எடுக்க வக்கீலை அணுகினேன். முதல் தடவையாக ரூ.10 ஆயிரம் கொடுத்தேன். இதன்பிறகு, நீதிபதிக்கு லஞ்சம் கொடுத்தால், ஜாமீன் கிடைத்துவிடும். எனவே, ரூ.50 ஆயிரம் வேண்டும் என்று வக்கீல் கேட்டார். இதன்படி, என்னிடம் ரூ.25 ஆயிரம் வாங்கினார். ஆனால், இப்போது, ஜாமீன் கிடைக்கவில்லை" என்று பரபரப்புடன் கூறினார். அவர் கூறியதை கேட்டதும், நீதிமன்றமே சில நொடிகளுக்கு நிசப்தமானது. இதனைத்தொடர்ந்து, கோர்ட் தலைமை எழுத்தர் ராஜேஸ்வரி, ரேஸ்கோர்ஸ் போலீசில் எட்வின் ஜெயக்குமார் மீது புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து, வக்கீலை கைது செய்தனர்.

# லஞ்சம் வாங்கிய டி.எஸ்.பி., கான்ஸ்டபிளாக பதவி இறக்கம்

## உ.பி., முதல்வர் யோகி உத்தரவு

லக்னோ, நவ. 3–

உ.பி.,யில் பலாத்கார வழக்கில் நடவடிக்கை எடுக்காமல் குற்றவாளிகளிடம் லஞ்சம் பெற்றதாக டி.எஸ்.பி., மீது ஆதாரத்துடன் எழுந்த புகாரில், அவரை கான்ஸ்டபிளாக பதவி இறக்கம் செய்து முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டார்.

உத்தர பிரதேசத்தில் 2021ம் ஆண்டு பெண் ஒருவர் ராம்பூர் மாவட்ட எஸ்.பி., அலுவலகத்தில் புகார் மனு கொடுத்தார். அதில் தன்னை, சுவாமி விவேகானந்தா மருத்துவமனை உரிமையாளர், காவல் ஆய்வாளர் ராம்வீர் யாதவ் பாலியல் பலாத்காரம் செய்தனர். உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகாரில் கூறியிருந்தார்.

இது குறித்து ராம்பூர் மாவட்ட டி.எஸ்.பி.,யாக இருந்த வித்யா கிஷோர் சர்மா, வழக்குப்பதிந்து விசாரிக்காமல் இழுத்தடிப்பு செய்தார். பின்னர் இடமாறுதலில் சென்றுவிட்டார். இந்த விவகாரம் தகவல் அறியும் உரிமை சட்ட ஆர்வலர் மூலம் சமர்பித்த வீடியோ ஆதாரம் முதல்வர் யோகி ஆதித்யநாத் கவனத்திற்கு சென்றது. விசாரணையில் பலாத்கார குற்றவாளிகளிடம் டி.எஸ்.பி., ரூ. 5 லட்சம் லஞ்சம் பெற்று வழக்கு பதியாமல் இருப்பது தெரியவந்தது. 2021 டிசம்பரில் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

டி.எஸ்.பி., லஞ்சம் பெற்றது வீடியோ ஆதாரத்துடன் உறுதியானது. இதையடுத்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட டிஎஸ்.பி.,யை கான்ஸ்டபிளாக பதவி இறக்கம் செய்து முதல்வர் உத்தரவிட்டார்.

வழக்குப்பதிவு செய்யாமல் இழுத்தடிப்பு செய்த டி.எஸ்.பி., மீது எப்.ஐ.ஆர்., பதிவு செய்யுமாறு துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

முதல்வரின் இந்த உத்தரவு சக போலீஸ் அதிகாரிகள், கீழ்நிலை காவலர்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது.

### விபத்து இழப்பீடு வழக்குகளில் முறைகேடு

# திருவண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிபதி டிஸ்மிஸ்

## சென்னை ஐகோர்ட் அதிரடி

திருவண்ணாமலை, நவ. 12–

விபத்து இழப்பீடு வழக்குகளில் தவறுகள் நடந்திருப்பதாக எழுந்த புகாரின் அடிப்படையில் திருவண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிபதியை டிஸ்மிஸ் செய்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிபதியாக பணியாற்றி வந்தவர் எம்.கே. ஜமுனா. இவர் நீதிபதியாக பணியாற்றிய காலத்தில் பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்ததாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக எழுந்த புகார்களின் பேரில் சென்னை உயர்நீதிமன்றம் விசாரணை நடத்தியது. அதனடிப்படையில் எம்.கே. ஜமுனாவை பணிநீக்கம் செய்து சென்னை உயர்நீதிமன்றம் நேற்று அதிரடியாக உத்தரவிட்டுள்ளது. அந்த உத்தரவை சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர், திருவண்ணாமலை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அந்த உத்தரவு நீதிபதி எம்.கே. ஜமுனாவிடம் ஒப்படைக்கப்பட்டது.



எம்.கே. ஜமுனா

ஏற்கனவே திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதியாக பணிபுரிந்த போது விபத்து இழப்பீடு வழக்குகளில் தவறுகள் நடந்ததாக அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையிலும், திருவண்ணாமலையில் பொறுப்பேற்ற பிறகு விபத்து வழக்கு விசாரணையில் தவறுகள் நடந்திருப்பதற்கான முகாந்திரங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. அதன் எதிரொலியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிகிறது. நீதிபதி டிஸ்மிஸ் செய்யப்பட்டதால் திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்று நடந்த மக்கள் நீதிமன்றத்தில் எம்.கே. ஜமுனா பங்கேற்கவில்லை.

திருவண்ணாமலையில் நீதிபதி டிஸ்மிஸ் செய்யப்பட்ட சம்பவம் நீதிபதிகள், வக்கீல்கள் மற்றும் கோர்ட் ஊழியர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெறுவீர்!**
**விளம்பரக்கட்டண விவரம்**
**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**
**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

மாதனூர் ஒன்றியம் வீராங்குப்பத்தில்

# அரசுக்கு ₹9 லட்சம் இழப்பு ஏற்படுத்திய ஊராட்சி தலைவியின் 'செக்' பவர் பறிப்பு

## திருப்பத்தூர் கலெக்டர் அதிரடி

ஆம்பூர், நவ. 15: திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில் 44 ஊராட்சிகள் உள்ளன. இதில் ஆம்பூர் அடுத்த வீராங்குப்பம் ஊராட்சி தலைவராக திவ்யா ஜானகிராமன் பதவி வகித்து வருகிறார். இந்நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அதே ஊராட்சியில் இருந்த அரசுக்கு சொந்தமான பழைய ஊராட்சி கட்டிடத்தை உரிய அனுமதி பெறாமல் இடித்து தள்ளியதாக புகார் எழுந்தது.

இதுகுறித்து ஊராட்சி தலைவர் திவ்யா ஜானகிராமன் கடந்த 8ம் தேதி மாதனூர் பிடிஓ அலுவலகத்தில் விளக்கம் சமர்பித்தார். ஆனால், இந்த விளக்கம் ஏற்புடையதாக இல்லாத நிலையில், அவர் உரிய அரசு விதிமுறைகள், நெறிமுறைகளை கடைபிடிக்காமல் தன்னிச்சையாக செயல்பட்டதால் அரசுக்கு ₹9 லட்சத்து 2 ஆயிரம் வருவாய் இழப்பு ஏற்படுத்தி உள்ளதாகவும், ஊராட்சி தலைவர் சுயமாக செயல்படாமல் அவரது கணவர் ஊராட்சி நிர்வாகம் செய்துள்ளதாகவும் மாதனூர் பிடிஓ அலுவலக அதிகாரிகள் நடத்திய விசாரணையில் தெரியவந்தது.

இதை தொடர்ந்து மாவட்ட கலெக்டர் அமர் குஷ்வாஹா, தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டபிரிவின் கீழ் ஊராட்சி நிர்வாக நலன் கருதி ஊராட்சியின் வங்கி கணக்குகளை இயக்கும் ஊராட்சி தலைவரின் அதிகாரத்தை நீக்கியும், இவருக்கு பதிலாக மாதனூர் பிடிஓ (கிராம ஊராட்சி) வீராங்குப்பம் ஊராட்சியின் காசோலைகளில் கையொப்பமிட அனுமதித்தும், பிடிஓ (கிராம ஊராட்சி) எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் பணியாற்றவும் நேற்று முன்தினம் அதிரடி உத்தரவிட்டுள்ளார்.

இதனால் மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.




**லஞ்சம் கேட்கும் அதிகாரிகள்: பணத்துடன் வந்த தி.மு.க., கவுன்சிலர்**

**சிவகாசி மாநகராட்சி கூட்டத்தில் புதிய கட்டடத்திற்கு வரி நிர்ணயம் செய்வதற்கும், பெயர் மாற்றம் செய்வதற்கும் ஏழு மாதங்களாக இழுத்தடித்ததால் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக 5வது வார்டு தி.மு.க., கவுன்சிலர் இந்திராதேவி, பணத்துடன் வந்தார். தி.மு.க., கவுன்சிலரே பணத்துடன், மாநகராட்சி கூட்டத்திற்கு வந்தது அதிகாரிகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது.**

Download Dinamalar APPS
Google Play App Store
FOLLOW


30-11-2022

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

நேர்மை நெறி- டிசம்பர் 2022

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20


# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**


**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Dec 2022
Due to corona published online)


.வெந்து கெட்டது முருங்கை
வேகாமல் கெட்டது அகத்தி

***<u>பெறுநர்</u>***

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,** AYANAVARAM, CHENNAI-23


Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan


இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!